# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2194/7 - 2020 සැප්තැම්බර් මස 21 වැනි සඳුදා - 2020.09.21

*2194/7 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 21 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களினால் செய்யப்படும் பிரகடனம்**

(முத்திரை)

கோட்டாபய ராஜபக்ஷ

**சனாதிபதியின் பணிப்புரை**

1. திரு.பசில் ராஜபக்ஷ அவர்கள்
   சனாதிபதியின் விசேட பிரதிநிதி
2. கலாநிதி நந்தலால் வீரசிங்க அவர்கள்
   சிரேட்ட பிரதி ஆளுநர், இலங்கை மத்திய வங்கி
3. லெப்டினன்ட் ஜெனரால் சவேந்திர சில்வா அவர்கள்
   பாதுகாப்பு பதவிநிலை பிரதானி /தரைப்படைத் தளபதி
4. திரு.சி.டி.விக்கிரமரத்ன அவர்கள்
   பதில் பொலிஸ்மா அதிபர்
5. மேஜர் ஜெனரால் (ஓய்வுபெற்ற) சாந்த திசாநாயக்க அவர்கள்
   தலைவர், நுகர்வோர் அலுவல்கள் பற்றிய அதிகாரசபை


1A - G 32736— 380 (2020/09)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

6. திரு. ஜே. ஏ. நுஷாட் எம். பெரேரா அவர்கள்
தலைவர், கூட்டுறவு மொத்த விற்பனைக் கூட்டுத்தாபனம்

7. திரு. சுசந்த ரத்நாயக்க அவர்கள்
தலைவர், இலங்கை முதலீட்டுச் சபை

8. திரு.ஜயந்த டி சில்வா அவர்கள்
தலைவர், இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மை

9. திருமதி கிமாலி பெர்ணாந்து அவர்கள்
தலைவர், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

10. திரு. ஜயம்பதி மொல்லிகொட அவர்கள்
தலைவர், இலங்கை தேயிலைச் சபை

11. திரு. பிரபாத் சுபசிங்க அவர்கள்
தலைவர், ஏற்றுமதி அபிவிருத்திச் சபை

12. திரு. ஏ. விமலவீர அவர்கள்
தொழில் ஆணையாளர் நாயகம்

13. திரு. எஸ். சிங்கப்புலி அவர்கள்
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்

14. ரியர் அத்மிரால் (ஓய்வுபெற்ற) ஆனந்த பீரிஸ் அவர்கள்
பணிப்பாளர் நாயகம், சிவில் பாதுகாப்புத் திணைக்களம்

15. மேஜர் ஜெனரால் (ஓய்வுபெற்ற) ஜி.விஜித்த ரவிபிரிய அவர்கள்
பணிப்பாளர் நாயகம், இலங்கைச் சுங்கம்

16. திரு. பந்துல திலக்கசிறி அவர்கள்
பணிப்பாளர் நாயகம், சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம்

17. திரு. சஞ்ஜய மொஹொட்டால அவர்கள்
பணிப்பாளர் நாயகம், இலங்கை முதலீட்டுச் சபை

18. மேஜர் ஜெனரால் (ஓய்வுபெற்ற) சுதந்த ரணசிங்க அவர்கள்
பணிப்பாளர் நாயகம், அனர்த்த முகாமைத்துவ நிலையம்

19. திரு. மஹேஷ் கம்மம்பில அவர்கள்
பணிப்பாளர், உரச் செயலகம்

20. திரு. புத்திக மடிஹஹேவா அவர்கள்
முகாமையாளர், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

21. திரு. ரொஹான் செனெவிரத்ன அவர்கள்
மேலதிக முகாமையாளர், இலங்கை மின்சார சபை

22. திரு. மனோ சேகரம் அவர்கள்
பணிப்பாளர் சபை உறுப்பினர், இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மை

23. மேஜர் ஜெனரால் (ஓய்வுபெற்ற) சுமேத பெரேரா அவர்கள்

24. திரு. சஞ்ஜீவ குணவர்த்தன அவர்கள்
நிறைவேற்று உத்தியோகத்தர், ஈ. டப்ளிவ். கிறேசி மற்றும் கம்பனி

25. திரு.சமந்த குமாரசிங்க அவர்கள்
தலைமையதிபதி, நேச்சர்ஸ் சீக்கிரட் நிறுவனம்

26. திரு. ஷெராட் அமலியன் அவர்கள்
பிரதித் தலைவர், மாஸ் ஹோல்டிங்ஸ்

27. கலாநிதி ரவி லியனகே அவர்கள்
தலைவர், ரைகம் மார்க்கட்டின் சர்விஸஸ் (தனியார்) நிறுவனம்

28. திரு. பத்மலால் விதானகே அவர்கள்
முகாமைத்துவப் பணிப்பாளர், சென்மிக் சமூக வியாபாரய

29. திரு.எஸ்.பீ.திவாரத்ன அவர்கள்
ஓய்வுபெற்ற பிரதித் திறைசேரிச் செயலாளர்

30. பிரதமரின் செயலாளர் மற்றும் நிதி, பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி, வீதி மற்றும் நெடுஞ்சாலைகள், பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி, பெருந்தோட்ட, கைத்தொழில் மற்றும் ஏற்றுமதிக் கமத்தொழில் மற்றும் கைத்தொழில் மற்றும் வழங்கல் முகாமைத்துவம், மின்சக்தி மற்றும் வலுசக்தி, மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூகப் பாதுகாப்பு, மகாவலி, கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி மற்றும் நகர அபிவிருத்தி, நீர்வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள், பாதுகாப்பு, உள்ளக வர்த்தகம், உணவுப் பாதுகாப்பு மற்றும் பாவனையாளர் நலனோம்புகை மற்றும் வெளிநாட்டு உறவுகள் ஆகிய அமைச்சுக்களின் செயலாளர்கள்

ஆகியோருக்கு,

வாழ்த்துக்கள்!

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 33 ஆம் உறுப்புரையினால் எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பிரயோகித்து, 2020.04.21 ஆந் திகதிய சனாதிபதியின் பணிப்புரை மூலம் தாபிக்கப்பட்ட பொருளாதாரப் புத்தெழுச்சி மற்றும் வறுமையை ஒழித்தலுக்காகச் செயலணியின் உறுப்பினர்களாக தாங்கள் நியமிக்கப்பட்டுள்ளதாதலாலும்,

மேலும் இச்செயலணிக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள பணிகளில் பிரதேச அபிவிருத்தி எனும் விடயத்திற்காக கூடிய கவனம் செலுத்தப்பட்டுள்ளதால் மற்றும் அதற்குரிய பணிகளை பிரதேச மட்டத்தில் வினைத்திறனாக செயற்படுத்துவதை மேலும் வலுவூட்டும் தேவையை அடையாளங் காணப்பட்டுள்ளதாதலாலும்,

மேற்போந்த செயலணியின் உறுப்பினராக நியமிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் சிரேட்ட பிரதி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க அவர்களுக்குப் பதிலாக இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர் திரு.டி.எல்.நிஹால் அவர்களை மேற்போந்த செயலணியின் உறுப்பினரொருவராக நியமிக்கின்றேன்.

மேலும், 2020 ஓகத்து மாதம் 05 ஆந் திகதி இடம்பெற்ற பாராளுமன்றத் தேர்தலின் பின்னர் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பிற்கமைய என்னால் புதிய அமைச்சரவையின் அமைச்சுக்களின் எண்ணிக்கை, அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளதாலும் மற்றும் அதுவரை இருந்த அமைச்சுக்களின் பெயர்கள் மாறி உள்ளதாலும்,

மேலும், மேஜர் ஜெனரால் (ஓய்வுபெற்ற) சுமேத பெரேரா அவர்கள் கமத்தொழில் அமைச்சின் செயலாளராகப் பணியாற்றுவதைக் கவனத்தில்கொண்டும்,

மேற்போந்த மாற்றங்களைக் கருத்திற்கொண்டு இலக்கம் 23 இன் கீழ் சொல்லப்பட்ட பெயரை நீக்கிவிட்டு இல.30 இன் கீழ் காட்டப்படும் பதவிப் பெயர்களை கீழ்க்காணும் விதத்தில் திருத்துகின்றேன்.

பிரதமரின் செயலாளர் மற்றும் நிதி, பாதுகாப்பு, நெடுஞ்சாலைகள், அரச சேவைகள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி, பெருந்தோட்ட, கைத்தொழில், மின்சக்தி, வலுசக்தி, கல்வி, கமத்தொழில், நீர்ப்பாசனம், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு, நீர்வழங்கல், வர்த்தக மற்றும் வெளிநாட்டலுவல்கள் ஆகிய அமைச்சுக்களின் செயலாளர்கள்

இரண்டாயிரத்து இருபதாம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 16 ஆந் திகதியாகிய இன்று இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பகிரங்க இலச்சினையின் கீழ் கொழும்பில் வழங்கப்பட்டது.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

**பீ. பி. ஜயசுந்தர,**
சனாதிபதியின் செயலாளர்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.